டிரஸ்ட் ஆரம்பித்திட...
புதிதாக டிரஸ்ட், பவுண்டேஷன், கட்சி, ஆசிரமம், சங்கம், மன்றம், கழகம் பதிவு செய்திட தொடர்பு கொள்ளவும்.
பகவான் பவுண்டேஷன்
96004 02096

நல்லவே எண்ணல் வேண்டும்... எண்ணிய முடிதல் வேண்டும்...

# சக்கர வியூகம்

தினசரி நாளிதழ் "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" DAILY NEWS PAPER
★SAKKRA VIYUGAM★

இணையத்தில் வாசிக்க..,

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

| VOLUME : 01 | ISSUE: 147 | 21.11.2025 | FRIDAY | KARTHIGAI : 4 | PRICE : RS.5/- |
|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 147 | 21.11.2025 | வெள்ளிக்கிழமை | கார்த்திகை : 4 | விலை : ரூ.5/– |

3 உச்சநீதிமன்றத் தீர்ப்பை நான் மனமார வரவேற்கிறேன்: செல்வப்பெருந்தகை

4 2026 சட்டசபை தேர்தலில் 5 தொகுதிகள் வேண்டும்: இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சி

2 தேர்தலுக்கு முன் கரூர் வழக்கில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ய சிபிஐ திட்டம்?

# ரூ.59.93 கோடி செலவிலான கல்விசார் கட்டடங்களை முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை: நவ.21-

உயர்கல்வித் துறை சார்பில் ரூ.59.93 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கல்விசார் கட்டடங்களை முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார். மேலும், உதவிப் பேராசிரியர்கள், உதவி நூலகர்கள் மற்றும் உதவி இயக்குநர் (உடற்கல்வி) பணியிடங்களுக்கான பணிநியமன ஆணைகளையும் வழங்கினார்.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு: தலைமைச் செயலகத்தில் உயர்கல்வித் துறை சார்பில் கடலூர், விழுப்புரம், திருப்பத்தூர், அரியலூர், மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களிலுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 59 கோடியே 93 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கல்விசார் கட்டடங்களை முதல்வர் ஸ்டாலின் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்து, தமிழ்நாட்டில் உள்ள 44 அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளைத் திறன்மிகு மையங்களாக (Centre of Excellence) மேம்படுத்திடும் வகையில் டாடா டெக்னாலஜிஸ் லிமிடெட் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

மேலும், 190 உதவிப் பேராசிரியர்கள், 12 உதவி நூலகர்கள் மற்றும் 11 உதவி இயக்குநர் (உடற்கல்வி) பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு முதல்வர் ஸ்டாலின் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாட்டில் உயர்கல்வியை மேம்படுத்தும் நோக்கில், அதிக எண்ணிக்கையிலான உயர் கல்வி நிறுவனங்களை தொடங்குதல், அதன் வாயிலாக ஆராய்ச்சி, புதுமைப் படைப்புகள், தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றில் மாணவர்களின் திறன்களை வளர்த்து, வேலைவாய்ப்பினை உறுதி செய்தல், "நான் முதல்வன்" திட்டத்தின் மூலம் தகுதி வாய்ந்த திறன்மிகு இளைஞர்களை உருவாக்குதல், அரசு பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்த மாணவிகள் உயர்கல்வி பயிலப் "புதுமைப்பெண்" திட்டம் மற்றும் மாணவர்கள் உயர்கல்வி பயிலத் "தமிழ்ப் புதல்வன்" ஆகிய திட்டங்களின்




கீழ் மாதம் ரூபாய் 1000 உதவித்தொகை வழங்குதல், முதல் தலைமுறைப் பட்டதாரிகளுக்குச் சலுகைகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் போன்ற பல்வேறு திட்டங்களைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருவதால் அகில இந்திய அளவில் உயர்கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதலிடம் வகித்து வருகிறது.

திறந்து வைக்கப்பட்ட உயர்கல்வித் துறை கட்டடங்களின் விவரங்கள்: உயர்கல்வித் துறையின் உட்கட்டமைப்புகளை மேம்படுத்திடும் வகையில் கடலூர் மாவட்டம், வடலூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 13 கோடியே 71 லட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடங்கள், விழுப்புரம் மாவட்டம், செஞ்சி கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 13 கோடியே 92 லட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடம்.

திருப்பத்தூர் மாவட்டம், நாட்றாம்பள்ளி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 14 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடம், அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 15 கோடியே 60 லட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடம், மயிலாடுதுறை மாவட்டம், மணல்மேடு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பெருந்தலைவர் காமராஜர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 6 கூடுதல் வகுப்பறைகள் மற்றும் கழிவறைத் தொகுதிக் கட்டடம் என மொத்தம் 59 கோடியே 93 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள, உயர்கல்வித் துறை சார்ந்த கட்டடங்களை முதல்வர் திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டில் உள்ள 44 அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளைத் உலகத் தரமான தொழிற்துறை 4.0 தரங்களுக்கு ஏற்ப திறன்மிகு மையங்களாக (Centre of Excel-lence) 2,590.303 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்துவதற்கு Tata Technologies Limited நிறுவனத்திற்கும், தமிழ்நாடு அரசின் தொழில்நுட்ப கல்வி ஆணையரகத்திற்கும் இடையே முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் இன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

இப்புரிந்துணர்வு ஒப்பந்தமானது, தொழிற்துறையுடன் இணைந்து கல்வி நிறுவனங்களின் உட்கட்டமைப்புகளை நவீனமயமாக்குதல், புதிய தொழிற்சார் பாடத்திட்டங்களை உருவாக்குதல், ஆசிரியர்களின் கற்பித்தல் திறனை மேம்படுத்துதல், மாணவர்களுக்கான வேலைவாய்ப்புகளை அதிகரித்தல் ஆகியவற்றை நோக்கமாக கொண்டுள்ளது.

மேலும், இத்திட்டம் தொழிற்துறையின் தற்போதைய மற்றும் எதிர்காலத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் திறன்மிக்க மனித வளங்களை உருவாக்க உதவுவதோடு, தொழிற்துறை மற்றும் கல்வித் துறைக்கிடையேயான இடைவெளியைக் குறைத்து, தொழில்துறையின் தேவைகளுக்கு ஏற்ப பயிற்சி பெற்ற, உயர்திறன்மிக்க தொழில்நுட்ப வல்லுநர்களாக மாணவர்கள் உருவாக்கப்படுவர்.

உதவிப் பேராசிரியர்கள், உதவி நூலகர்கள் மற்றும் உதவி இயக்குநர் (உடற்கல்வி) பணியிடங்களுக்கான பணிநியமன ஆணைகள் வழங்குதல்: அண்ணா பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகளில் 190 உதவிப் பேராசிரியர்கள், 12 உதவி நூலகர்கள் மற்றும் 11 உதவி இயக்குநர் (உடற்கல்வி) பணியிடங்களுக்கு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக தேர்வு நடத்தப்பட்டு, பின்னர் அண்ணா பல்கலைக்கழகத்தால் நேர்முகத்தேர்வு நடத்தப்பட்டு, இப்பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு முதல்வர் இன்று பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

## ஆ.ராசா எம்.பி அவர்களை நல்லாறு பாதுகாப்பு இயக்கத்தினர் நேரில் சந்திப்பு



■ திருப்பூர் நல்லாறு பாதுகாப்பு இயக்கம் சார்பில், நீலகிரி பாராளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா அவர்களை நேரில் சந்தித்து, நல்லாற்றின் ஆக்கிரமிப்புகளை அகற்றி, தூர்வாரி சுத்தம் செய்திட மனு வழங்கப்பட்டது. மனுவைப் பெற்றுக் கொண்ட ஆ.ராசா எம்.பி அவர்கள் உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தார்.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

அழையுங்கள்! வாசகர்களே!!
தங்கள் பகுதிகளில் நடக்கும் தாங்கள் காணும் விரும்பத்தகாத செயல்கள், அவலங்கள், சட்டத்திற்கு புறம்பான செயல்பாடுகள், பெண்களுக்கு எதிரான கொடுமைகள் மற்றும் சமூகத்தில் நடக்கும் தங்களால் தட்டிக் கேட்க இயலாத அநீதிகளை எங்களுக்கு உடனுக்குடன் தெரியப்படுத்தவும். (ரகசியம் பாதுகாக்கப்படும்)
(24 x 7)
88705 00000
sakkraviyugam2025@gmail.com

# ஒரே பெர்மிட்...

## பல இடங்களில் வெட்டி எடுக்கப்படும் கிராவல் மண் திருப்பூரில் என்ன செய்கிறது மாவட்ட நிர்வாகம்...?

திருப்பூர், நவ.21-

திருப்பூர் மாவட்டத்தில் பல இடங்களில் அரசின் அனுமதியின்றி கிராவல் மண் வெட்டி எடுக்கப்படுவதாக பல தரப்பினரும் கூறிவரும் நிலையில், இது சம்பந்தமாக களத்தில் இறங்கினோம் நாம். திருப்பூர் மாவட்டத்தில் எப்போதுமே அனுமதியின்றி கிராவல் மண் வெட்டி எடுக்கப்பட்டு வந்து கொண்டு தான் இருக்கிறது. இதனை தொடர்ந்து தற்போது புதியதாக 15க்கும் மேற்பட்ட இடங்களில் இரவு பகல் எந்நேரமும் அரசின் அனுமதியின்றி, கிட்டத்தட்ட 500க்கும் மேற்பட்ட லோடுகள் வெட்டி எடுக்கப்பட்டு வெளியில் அனுப்பப்படுகிறது.

கிராவல் மண் வெட்டி எடுத்து செல்வதற்கு ஒவ்வொரு நடைக்கும் ஒரு அனுமதி சீட்டு கட்டாயம் வைத்திருக்க வேண்டும். ஆனால் தற்போது 15க்கும் மேற்பட்ட இடங்களில் கிராவல் மண் வெட்டி எடுத்தும், ஒரே ஒரு அனுமதி சீட்டை மட்டும் வைத்துக்கொண்டு பல்வேறு இடங்களில் மண் திருடப்பட்டு வருகிறது. புவியியல் மற்றும் சுரங்கத் துறை விதிகளின்படி, கிராவல் மண் வெட்டி எடுத்து அனுப்பப்படும் போது, அனுமதி சீட்டு கட்டாயம் கொடுத்தாக வேண்டும். ஆனால் புவியியல் மற்றும் சுரங்கத் துறையின்





### தேசிய சட்ட உரிமைகள் கழகத்தில் திருப்பூர் மாவட்ட சமூக ஆர்வலர்கள் புகார்

**நிலத்தடி நீர்மட்டம் குறைவதாலும், மாசுபடுவதாலும் அரசின் அனுமதியின்றி, கிராவல் மண்வெட்டி எடுக்கப்படுகின்றன. இது சம்பந்தமாக மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்காமல் இருந்து வருவதால், தங்களது அமைப்பின் மூலமாக சட்ட நடவடிக்கை எடுத்திட வேண்டி தேசிய சட்ட உரிமை கழகத்தில் திருப்பூர் மாவட்ட சமூக ஆர்வலர்கள் சிலர் புகார் அளித்துள்ளனர்.**

**கிராவல் மண் வெட்டி எடுப்பது இயற்கை வளங்களை சுரண்டுவதாக இருந்தாலும், பல நூறு அடிகள் வெட்டி எடுக்கப்படுவதால், நிலத்தடி நீர்மட்டம் பெருமளவு பாதிக்கப்பட்டு வருகின்றது. இவற்றையெல்லாம் எதையுமே கண்டும் காணாமல் இருக்கும் புவியியல் மற்றும் சுரங்கத் துறையும், மாவட்ட நிர்வாகமும் என்ன சொல்ல போகிறது**

விதிமுறைகளை காற்றில் பறக்கவிட்டு, இவர்கள் தங்கள் இஷ்டத்திற்கு பர்மிட் இல்லாமல் பல்வேறு இடங்களில் வெட்டி எடுத்து வருகின்றனர். இந்த கிராவல் கொண்டு செல்லப்படும் வாகனம் ஏதேனும் ஒரு விபத்திற்கு உள்ளாகிவிட்டால், அந்த நேரத்தில் மாவட்ட நிர்வாகம் பல பிரச்சனைகளை சந்திக்க வேண்டி வரும் என்பது அனைவரும் தெரிந்த ஒன்று.

திருப்பூர் மாவட்டத்தில் பகல் நேரங்களில் மட்டுமே 500க்கும் மேற்பட்ட லாரிகளில் திருட்டுத்தனமாக வெட்டி எடுக்கப்பட்டு, மாவட்டம் முழுவதும் கனிம வளங்கள் லாரிகளில் பறந்து கொண்டிருக்கின்றன. திருப்பூர் மாவட்ட புவியியல் மற்றும் சுரங்கத்துறை, திருட்டுத்தனமாக தினசரி வெட்டி எடுக்கப்படும் நூற்றுக்கணக்கான கிராவல் மண் லோடு வண்டிகளை ஆசிர்வாதம் செய்து அனுப்பி வைக்கிறது. இதில் கேலி கூத்து என்னவென்றால் மாவட்ட நிர்வாகமோ கைகட்டி, வாய் பொத்தி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது என பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் கூறி வருகின்றனர்.

# தேர்தலுக்கு முன் கரூர் வழக்கில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ய சிபிஐ திட்டம்?

சென்னை, நவ.21-

கரூர் கூட்ட நெரிசலில் 41 பேர் பலியான வழக்கு தொடர்பாக சட்டமன்ற தேர்தலுக்கு முன்பு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய சிபிஐ திட்டமிட்டுள்ளது. கரூரில் கடந்த செப்டம்பர் 27ம்தேதி விஜய் பங்கேற்ற பிரசார கூட்டத்தில் கூட்ட நெரிசல் ஏற்பட்டு 41 பேர் பலியாகினர். 100க்கும் மேற்பட்டோர் காயமடைந்து அதன் வலியில் இருந்தும், சோகத்தில் இருந்தும் மக்கள் இன்னும் மீளாமல் உள்ளனர். அந்த சம்பவம் தொடர்பாக சிபிஐ தனது விசாரணையை முழுவீச்சில் தொடங்கியுள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக ஐ.பி.எஸ். அதிகாரி பிரவீன்குமார் தலைமையிலான சி.பி.ஐ. குழுவினர் கரூர் தாந்தோணிமலையில் உள்ள அரசு சுற்றுலா மாளிகையில் தங்கி விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கிடையே 2 பெண் சி.பி.ஐ. அதிகாரிகளும் விசாரணை குழுவில் இணைந்துள்ளனர். இந்த நிலையில் விசாரணையை தீவிரப்படுத்தி உள்ள சி.பி.ஐ. அதிகாரிகள், குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்யும் பணியில் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனர். இந்த வழக்கில் சட்டமன்ற தேர்தலுக்கு முன்பு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய சிபிஐ திட்டமிட்டுள்ளது. இதற்கான பணியில் அவர்கள் இரவு, பகலாக ஈடுபட்டுள்ளனர். தமிழக சட்டமன்ற தேர்தல் தொடர்பான அறிவிப்பு வருகிற பிப்ரவரி அல்லது மார்ச் முதல் வாரத்தில் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.



# தொடர் வெடிகுண்டு மிரட்டல் எதிரொலி; சென்னை விமான நிலையத்தில் சோதனைகளால் பயணிகள் அவதி: புறப்பாடு விமானங்களும் தாமதம்

சென்னை, நவ.21-

சென்னை விமான நிலையத்திற்கு தொடர்ந்து வெடிகுண்டு மிரட்டல் புரளிகள் காரணமாக, பலகட்ட சோதனைகள் துருவிதுருவி நடப்பதால் பயணிகள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். விமானங்களும் தாமதமாக செல்கின்றன. டெல்லி செங்கோட்டையில் கார் குண்டுவெடிப்பு சம்பவத்தை அடுத்து, நாடு முழுவதும் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. அதோடு சென்னை விமான நிலையத்திலும் அன்றைய தினத்தில் இருந்து பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிக்கப்பட்டதோடு 5 அடுக்கு பாதுகாப்பு முறை அமல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில், சென்னை விமான நிலையத்திற்கு தொடர்ச்சியாக வெடிகுண்டு மிரட்டல்கள் வந்துகொண்டு இருக்கின்றன. இதனால் சென்னை விமான நிலையத்தில் இருந்து புறப்பாடு விமானங்களில் பயணம் செய்யும் பயணிகளுக்கு நடக்கும் சோதனைகள் தொடர்ந்து அதிகரிக்கப்பட்டு வருகிறது.

அதோடு பயணிகளின் ஷூக்கள், பெல்ட்கள், குளிருக்காக அணிந்து இருக்கும் ஜாக்கெட்கள் உள்ளிட்டவைகள் அனைத்தையும் கழற்றி, ஸ்கேன் மூலம் பரிசோதித்து பின்பு மீண்டும் எடுத்து அணிந்து கொண்டு செல்வதற்கு அனுமதிக்கின்றனர். அதேபோல் ஷூக்கள், பெல்ட்கள், ஜாக்கெட்டுகள் போன்றவைகளை கழற்றி பாதுகாப்பு சோதனைக்கு வைப்பதில் காலதாமதம் செய்வதால் பயணிகளுக்கு நடக்கும் பாதுகாப்பு சோதனைகளும் தாமதமாகின்றன. இவ்வாறு பல கட்ட சோதனைகளால், காலதாமதம் ஏற்படுகிறது. இதனால் சென்னையில் இருந்து வெளிநாடுகளுக்கு புறப்பட்டுச் செல்லும் விமானங்கள் தாமதமாக புறப்பட்டு செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் நேற்று அதிகாலை சென்னையில் இருந்து வெளிநாடுகள் செல்லக்கூடிய பல விமானங்களில் பயணிகள் கூட்டம் வழக்கத்தை விட அதிகமாக இருந்தது.

அதோடு பயணிகளுக்கான பாதுகாப்பு சோதனைகளும் பல கட்டங்களாக தொடர்ந்து நடந்ததால் பயணிகள் விமானங்களில் ஏறுவது தாமதமாகி சென்னையில் இருந்து ஜெர்மன் நாட்டின் பிராங்க்பர்ட் நகருக்கு செல்லும் லூப்தான்ஷா ஏர்லைன்ஸ், துபாய் செல்லும் எமிரேட்ஸ் ஏர்லைன்ஸ், கோலாலம்பூர் செல்லும் ஏர் ஏசியா ஏர்லைன்ஸ், சிங்கப்பூர் ஏர்லைன்ஸ், தோகா செல்லும் இண்டிகோ ஏர்லைன்ஸ், தாய்லாந்து செல்லும் தாய் ஏர்லைன்ஸ், சார்ஜா செல்லும் ஏர் அரேபியன் ஏர்லைன்ஸ், அபுதாபி செல்லும் ஏர் அரேபியன் ஏர்லைன்ஸ், அபுதாபி செல்லும் எத்தியாட் ஏர்லைன்ஸ், மஸ்கட் செல்லும் ஓமன் ஏர்லைன்ஸ் உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட விமானங்கள், சுமார் 30 நிமிடங்களில் இருந்து ஒரு மணி நேரம் வரை தாமதமாக புறப்பட்டு சென்றன.

எனவே, இதுபோல் பயணிகள் கூட்டம் அதிகமாக இருக்கும் போதும், பயணிகளுக்கு கூடுதல் பாதுகாப்பு சோதனைகள் நடக்கும் போதும் இந்த சோதனைகளை நடத்தும் பாதுகாப்பு படை அதிகாரிகளான மத்திய தொழில் பாதுகாப்பு படையினரை கூடுதலாக பணியில் அமர்த்துவதோடு, பாதுகாப்பு சோதனை பணிகளை விரைந்து நடத்துவதற்கான பயிற்சி பெற்ற வீரர்களையும் பணியில் அமர்த்த வேண்டும். அதோடு பெரும்பாலான மத்திய தொழில் பாதுகாப்பு படை வீரர்கள் இந்தியில் மட்டுமே பேசுவதால் பாதுகாப்பு சோதனைகள் தாமதம் ஏற்படுகிறது. எனவே தமிழ் அல்லது ஆங்கிலம் பேசக்கூடிய வீரர்களை, இதேபோன்ற பாதுகாப்பு சோதனை பகுதிகளில் அதிகமாக நியமிக்க வேண்டும் என்று பயணிகள் தரப்பில் கூறுகின்றனர்.

# கட்டவாக்கம் சாலையில் அதிகரிக்கும் விபத்துகள்: வேகத்தடை அமைக்க வேண்டுகோள்

வாலாஜாபாத், நவ.21-

வாலாஜாபாத் ஒன்றியம், கட்டவாக்கம் ஊராட்சியில் 2000க்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர். இந்நிலையில் ஊத்துக்காடு கூட்டுச் சாலையில் இருந்து சுங்குவார்சத்திரம் செல்லும் சாலையை கட்டவாக்கம் மக்கள் கடக்க முயலும்போது நாள்தோறும் விபத்துக்குள்ளாகும் சூழல் அரங்கேறி வருகிறது. மேலும் சாலை கடக்கும் பகுதியில் நெடுஞ்சாலைதுறையினர் முன்னெச்சரிக்கை பலகை வைக்கவில்லை. சாலையை கடக்கும் பாதையில் வெள்ளை நிற கோடு போடப்பட்டிருக்கும். ஆனால் இப்பகுதியில் அப்படி எந்த வெள்ளை நிற கோடுகளும் இல்லை. இரவு நேரங்களில் பிரதிபலிப்பு ஸ்டிக்கர்களும் இல்லை.




இதனால் இந்த சாலையில் அதிவேகமாக வரும் பைக், கார், லாரி உள்ளிட்ட கனரக வாகனங்கள் சாலையை கடப்பவர்கள் மீது மோதி விபத்து ஏற்படுகிறது. இதுகுறித்து நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகளிடம் பலமுறை தெரிவித்தும் நெடுஞ்சாலைத்துறை இதுவரை முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. மாவட்ட நிர்வாகம் ஆய்வு மேற்கொண்டு இங்கு வேகத்தடை அமைத்து தர நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் சாலையை கடக்கும் பகுதி என்பதை குறிப்பிடும் வகையில் எச்சரிக்கை பலகைகளும், பிரதிபலிப்பு ஸ்டிக்கர்களும் பொருத்தப்பட வேண்டும் என்பதே இப்பகுதி மக்களின் கோரிக்கையாக உள்ளது.

# தேனி மாவட்ட SP மற்றும் தேவாரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தும் எந்தவித நடவடிக்கையும் இல்லை

## முதலமைச்சரின் தனி பிரிவிற்கு கடிதம் அனுப்ப உள்ளதாக பாதிக்கப்பட்ட குடும்பத்தினர்

தேனி நவ.21

தேனி மாவட்டம் உத்தமபாளையம் தாலுகா தேவாரம் பேரூராட்சி பகுதியில், இரு நபர்களுக்கிடையே நிலப்பிரச்சனை இருந்து வந்துள்ளது. இது தொடர்பாக அடிக்கடி சதீஷ் என்பவரிடமும், அவருடைய அக்காவுடனும் சண்டையில் ஈடுபட்டு வந்துள்ளனர். அவர்கள் அமைத்திருந்த வேலியை பிடுங்கி எறிந்து, கொலை மிரட்டல் விடுத்து பெண்களை ஆபாசமாக பேசி உள்ளனர். இதுகுறித்து தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இடம் புகார் அளித்தும், தேவாரம் காவல்நிலையத்தில் புகார் அளித்தும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்கின்றனர்.




தற்போது காவல்துறையினர் மெத்தனப்போக்கு காட்டி வருவதாகவும், எதிர்த்தரப்பினரிடம் பணத்தை வாங்கிக் கொண்டு தங்களை மிரட்டுவதாகவும் குற்றம் சுமத்தி வருகின்றனர். எதிர்தரப்பினர் விவேகானந்தன் என்பவர் பாலாஜி உரக்கடை வைத்து இருப்பவர்கள் இணைந்து தங்களுக்கு கொலை மிரட்டல் விடுத்து வருவதாகவும், பெண்களை ஆபாசமாக திட்டுவதாகவும் கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பு ரோட்டில் வைத்து அடித்து கொலை மிரட்டல் விடுத்து ஆபாசமாக பேசி பெண்களை தர குறைவாக தள்ளிவிட்டு உள்ளனர் என்று குற்றச்சாட்டு இருந்துள்ளது .

இதுகுறித்து தமிழக முதலமைச்சரின் தனி பிரிவிற்கு உரிய நடவடிக்கை வேண்டி கடிதம் அனுப்ப உள்ளதாக பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் கூறியுள்ளனர்.

# தங்கம் வென்று திருப்பூர் திரும்பிய மாற்றுத்திறனாளி மாணவனுக்கு திருப்பூர் ரயில் நிலையத்தில் உற்சாக வரவேற்பு

திருப்பூர், நவ.21-

திருப்பூர் அவினாசிலிங்கம் பாளையம் பகுதிய சேர்ந்த ராஜா, சுசிகலா தம்பதியினரின் மகனான சபரி ஆனந்த 14. வயதான இவர்., அப்பகுதியில் உள்ள அரசு பள்ளியில் எட்டாம் வகுப்பு படித்து வருகிறார். பிறந்தது முதல் உடலின் பல்வேறு உபாதைகளால் நடக்க முடியாமல் இருந்து வந்த சபரி ஆனந்திற்கு நீச்சல் போட்டியில் ஆர்வம் இருப்பது தெரிய வந்தது. இதை அடுத்து திருப்பூரில் உள்ள நீச்சல் பயிற்சி மையத்தில் கடந்த நான்கு ஆண்டுகளாக நீச்சல் பயிற்சி முறைப்படி பயிற்சி எடுத்து வந்த நிலையில், கோவாவில் கடந்த ஆண்டு நடைபெற்ற நேஷனல் சாம்பியன்ஷிப் போட்டியில் மூன்று தங்கம் என்று வெற்றி பெற்றார். இந்நிலையில் 25வது நேஷனல் பேரா ஒலிம்பிக் போட்டியானது,



ஹைதராபாத்தில் கடந்த 15 16 17 ஆகிய மூன்று நாட்கள் ஹைதராபாத்தில் நடைபெற்றது. இதில் இந்தியாவிலிருந்து பல்வேறு மாநிலங்களை சேர்ந்த மாற்றுத்திறனாளி மாணவர்கள் 64 பேர் கலந்து கொண்ட நிலையில், சப் ஜூனியர் போட்டியில் சபரி ஆனந்த் கலந்து கொண்டு மூன்று பிரிவுகளில் மூன்று தங்க பதக்கங்குகளை பெற்று தமிழகத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்.

இதை அடுத்து தங்க பதக்கங்களை வென்ற சபரி ஆனந்த் திருப்பூர் ரயில் நிலையத்திற்கு வந்தவரை அவரது குடும்பத்தார் மற்றும் உறவினர்கள் தனியார் அமைப்பினர் கலந்து கொண்டு சபரி ஆனந்திற்கு வாழ்த்து சொல்லி பொன்னாடை போர்த்தி வரவேற்றனர்..

# தமிழ்நாடு ரயில்வே கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் அமைக்க பரிந்துரை

## தெற்கு ரயில்வேக்கு தமிழக அரசு கடிதம்

சென்னை, நவ.21-

தென்காசி மாவட்ட ரயில் பணிகள் சங்கத் தலைவர் பாண்டியராஜாவும், சென்னையைச் சார்ந்த சமூக ஆர்வலர் சிட்லபாக்கம் தயானந்த் கிருஷ்ணனும் கடந்த ஜூன் 17ம் தேதி தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் முருகானந்தத்தை நேரில் சந்தித்து, தமிழ்நாடு ரயில்வே கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் அமைக்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வைத்தனர். இது சென்னை தலைமை செயலகத்தில் உள்ள தமிழ்நாடு போக்குவரத்து துறைக்கு அனுப்பப்பட்டது. இந்நிலையில் நவம்பர் 3ம் தேதி தமிழ்நாடு போக்குவரத்து துறை துணைச் செயலாளர் கிரேசி ஜோசப் தென்காசி மாவட்ட ரயில் பயணிகள் சங்கம் சார்பாக அளிக்கப்பட்ட கோரிக்கை மனுவை இணைத்து தெற்கு ரயில்வே பொது மேலாளருக்கு பரிந்துரை கடிதம் அனுப்பியுள்ளார். இதனால் தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் ரயில்வே திட்டங்களில் மிகப்பெரிய மாற்றம் வரும் மற்றும் ரயில்வே அடிப்படை கட்டமைப்புகளை விரைந்து மேம்படுத்தும் பட்சத்தில் கூடுதல் ரயில்கள் இயக்க முடியும்.

இதுகுறித்து தென்காசி மாவட்ட ரயில் பயணிகள் சங்கத் தலைவர் பாண்டியராஜா கூறியதாவது: தமிழ்நாடு ரயில்வே கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் அமைக்க தெற்கு ரயில்வேக்கு பரிந்துரை செய்த தமிழ்நாடு அரசுக்கு நன்றி. தமிழ்நாடு ரயில்வே கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் விரைவில் அமைக்கப்படும் பட்சத்தில் தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் ரயில்வே திட்டங்கள், அடிப்படை கட்டமைப்பு பணிகள் விரைவு பெறும். இதனால் தென் மாவட்டங்களில் இருந்து சென்னை, பெங்களூரு உள்ளிட்ட பெரு நகரங்களுக்கு கூடுதல் ரயில்கள் இயக்க நல்வாய்ப்பாக அமையும். அதேபோல கூடுதல் பெட்டிகள் நிறுத்த இடமில்லாமல் தவிக்கும் திருச்செந்தூரில் 24 பெட்டிகள் கொண்ட ஐந்து நடை மேடைகள் அமைக்கப்படும் பட்சத்தில் திருச்செந்தூரின் மக்கள் வசதிக்காக கூடுதல் ரயில்கள் அதிகபட்ச பெட்டிகளுடன் இயக்க முடியும். மேலும் தென்காசியில் புறவழி ரயில் பாதை அமைக்கப்படும் பட்சத்தில் நெல்லையிலிருந்து பாவூர்சத்திரம், தென்காசி, விருதுநகர் வழியாக கூடுதல் ரயில்கள் இயக்க முடியும். இவ்வாறு அவர் கூறினார்.



■ திண்டுக்கல் மாவட்டம், குஜிலியம்பாறை தாலுக்காவில் புதிதாக அமையப்பெற்ற மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்ற திறப்பு விழா காணொளி வாயிலாக திண்டுக்கல் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்றது. அருகில், திண்டுக்கல் முதன்மை மாவட்ட நீதிபதி திருமதி.யு.முத்துசாரதா, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.செ.சரவணன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.பிரதீப், இ.கா.ப., அவர்கள் ஆகியோர் உட்பட பலர் உள்ளனர்.



# ஆர்.கே.பேட்டை அருகே விவசாய நிலத்தில் தேங்கும் கழிவுநீர்: கதறும் விவசாயி வீடியோ வைரல்

ஆர்.கே.பேட்டை, நவ.21-

ஆர்.கே.பேட்டை அருகே விவசாய நிலத்தில் கழிவுநீர் தேங்கி துர்நாற்றம் வீசுவதால், விவசாயம் செய்ய முடியாமல் விவசாயி கதறும் வீடியோ வைரலாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஆர்.கே.பேட்டை ஒன்றியத்திற்கு உட்பட்ட ஸ்ரீ விலாசபுரம் கிராமத்தில் வசிப்பவர் தரணிபதி. விவசாயியான இவர், தனது குடியிருப்புக்கு அருகே சுமார் 3 ஏக்கர் நிலம் சொந்தமாக வைத்துள்ளார். தற்போது, ஆர்.கே.பேட்டை வட்டார வளர்ச்சி அலுவலகமும், ஊராட்சி நிர்வாகமும் இணைந்து குடியிருப்பு பகுதிகளுக்கு கழிவுநீர் கால்வாய் கட்டியுள்ளது. இந்த, கழிவுநீர் கால்வாயில் இருந்து நாள்தோறும் வெளியேறும் கழிவுநீர் இவருடைய சொந்தமான நிலத்தில் விட்டுள்ளனர். இதனால், அந்நிலத்தில் எந்தவித விவசாயமும் செய்ய முடியாமல் நிலத்தின் மண் மாறுபட்டுள்ளது. இதன் காரணமாக அந்நிலத்தில் பயிர் செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்.

இதனால், பாதிப்படைந்த விவசாயி தரணிபதி, கிராமத்தின் அருகாமையில் உள்ள ஓடை கால்வாயில் அரசுக்கு சொந்தமான புறம்போக்கு கால்வாய் உள்ளது. அந்த, கால்வாயில் குடியிருப்பு பகுதியில் இருந்து வெளியேறும் கழிவுநீரை சேமிக்கவோ அல்லது அதை மாற்று ஏற்பாடு செய்யவோ நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாவட்ட கலெக்டர், வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் பலமுறை கோரிக்கை மனுக்கன் கொடுத்தும், எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என கூறப்படுகிறது. இதுகுறித்து அதிகாரிகள், சரியான நடவடிக்கை எடுக்காத காரணத்தால் தன்னுடைய நிலத்தில் கழிவுநீர் தேங்கி, துர்நாற்றம் வீசுவதால், நிலத்தில் இறங்கி பணி செய்ய விவசாய தொழிலாளர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். இதனால், இவருடைய நிலம் தரிசு நிலமாகவே இருந்து வருவதால், தனக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டு, மிகுந்த மன வேதனைக்கு உள்ளாகியுள்ளார்.

மேலும், அவர் என்ன செய்வது? யாரை அணுகுவது என்று தெரியாமல் தவித்து வருகிறார். விரைவில், குடும்பத்தாரோடு மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் அல்லது சம்பந்தப்பட்ட அலுவலகத்தில் தற்கொலை செய்து கொள்வதை தவிர வேறொன்றும் தனக்கு தெரியவில்லை என்று கண்ணீரோடு வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார். தற்போது, இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகின்றது.



## கல்பாக்கத்தை ஒட்டிய கடலோர பகுதிகளில் பாதுகாப்பு ஒத்திகை ஈசிஆர் சாலையில் வாகன சோதனை தீவிரம்

கல்பாக்கம், நவ.21–

மாமல்லபுரம், கல்பாக்கம் உள்ளிட்ட கடலோர பகுதிகளில் கடலோர பாதுகாப்பு குழுமத்தினரும் காவல்துறையினரும் இணைந்து பாதுகாப்பு ஒத்திகையில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்காக, ஈசிஆர் சாலையில் வாகன சோதனை தீவிரப்படுத்தப் பட்டுள்ளது.

தமிழகத்தில் கடல் வழியாக தீவிரவாதிகள் ஊடுருவுவதை தடுப்பத ற்காக பாதுகாப்புப் படையினர் ஆண்டுதோறும் பல்வேறு ஒத்திகை நிகழ்ச் சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில், கடலோர பாதுகாப்பு குழும போலீ ஸாரும் உள்ளூர் சட்டம்ஒழுங்கு போலீஸாரும் இணைந்து சாகர் கவாச் எனப்படும் கடல் பாதுகாப்பு ஒத்திகையை தொடங்கியுள்ளனர். இன்றும் நாளையும் இந்த ஒத்திகை நடைபெற உள்ளது.

ஒத்திகையின் முதல் நாளான இன்று செங்கல் பட்டு மாவட்டத்தில் உள்ள கடலோர கிராமப்பகுதிகளில் கடலோர பாதுகாப்பு குழுமத்தினர் மற்றும் போலீஸார் கடற்கரையில் தீவிர ரோந்து மற்றும் சோதனைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும், சர்வதேச சுற்றுலா தலமான மாமல் லபுரத்திலும், சென்னை அணுமின் நிலையம், இந்திராகாந்தி அணு ஆராய்ச்சி மையம் அமைந்துள்ள கல்பாக்கம் பகுதிக்கு செல்லும் சாலையிலும் சதுரங்கப்பட்டினம் போலீஸார் வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும், கல்பாக்கம் உள்பட கடலோர கிராமப்பகுதிகளிலும் சோதனை மேற்கொள் ளப்பட்டு வருகிறது. இதுதவிர, தீவிரவாதிகள் போல் கடல் வழியாக ஊடுருவ முயலும் நபர்களை பிடிக்கும் ஒத்திகையில் போலீஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

கடற்கரையில் கண்காணிப்பு மற்றும் சோதனைகளில் கடலோர பாதுகாப்பு குழும போலீஸார் ஈடுபட்டு வரும் நிலையில், சதுரங்கப்பட்டினம், வெங்கம்பாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள ஈசிஆர் சாலையில் போலீஸார் தீவிர வாகன சோதனைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு, தேனி மாவட்டம், கொடுவிலார்பட்டி கம்மவார் சங்கம் கல்லூரியில் வாக்கு எண்ணிக்கை மையம் அமைப்பது தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



■ வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான கணக்கீட்டு படிவம் பூர்த்தி செய்யப்பட்டதை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் பெறப்பட்டு வரும் பணிகளை சேலம் மாவட்டம், சேலம் மேற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அங்கம்மாள் காலனி பகுதியில் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, நேரில் ஆய்வு மேற்கொண்டார்கள்.

## தவெக தலைவர் விஜய் மீண்டும் பரப்புரை... டிச.4ல் தொடங்கும் பயணம்: அனுமதி கேட்ட நிர்வாகிகள்

சென்னை, நவ.21-

தவெக தலைவர் விஜய் டிச.4ல் சேலத்தில் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடத்த அனுமதி கேட்டுள்ளனர். கோட்டை மைதானம் உள்ளிட்ட இடங்களில் பரப்புரை திட்டம் உள்ளது.

தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் மீண்டும் பரப்புரை பயணத்தை மேற்கொள்ளவுள்ளார். அடுத்தகட்டமாக பரப்புரை பயணம் செய்யவிருக்கும் இடம் குறித்த தகவல் வெளியாகியுள்ளன.

கரூர் வேலுச்சாமிபுரத்தில் கடந்த செப்டம்பர் 27ஆம் தேதி தவெக தலைவர் விஜய் மேற்கொண்ட பரப்புரையின்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இதையடுத்து, கட்சியின் நிர்வாக நடவடிக்கைகள் முடங்கியிருந்த நிலையில், ஒரு மாத இடைவெளிக்குப் பிறகு தீவிரமடைந்துள்ளன. அதன்படி, அண்மையில் மாமல்லபுரத்தில் உள்ள தனியார் அரங்கில் விஜய் தலைமையில் தற்போது தவெக சிறப்பு பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது.

இந்த நிலையில் மீண்டும் தவெக தலைவர் விஜய் பரப்புரை பயணத்தை மேற்கொள்ளவிருக்கிறார். அடுத்தகட்டமாக சேலத்தில் அவர் பரப்புரையில் ஈடுபட இருக்கிறார். தமிழக வெற்றி கழகம் சார்பில் சேலத்தில் டிசம்பர் மாதம் நான்காம் தேதி மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடத்த சேலம் மாநகர காவல் ஆணையாளர் அலுவலகத்தில் தற்போது தமிழக வெற்றி கழகம் நிர்வாகிகள் அனுமதி கேட்டு மனு கொடுத்து உள்ளனர்.

## சட்டவிரோதமாக குவாரி நடத்தி அபராதம் விதிக்கப்பட்டோர் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க ஐகோர்ட் ஆணை

மதுரை, நவ.21-

சட்டவிரோதமாக குவாரி நடத்தி அபராதம் விதிக்கப்பட்டோர் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவிட்டுள்ளது. சட்டவிரோதமாக குவாரிகள் நடத்தி அரசுக்கு இழப்பு ஏற்படுத்தும் நபர்கள் மீது வழக்குப் பதிந்து நடவடிக்கை கோரி மனு அளித்தார். அபராதம் விதிக்கப்பட்டு தொகை கட்டாதவர்கள் மீது வருவாய் மீட்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டது என அரசு தெரிவித்துள்ளது. சட்டவிரோதமாக குவாரிகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து நிலை அறிக்கை தாக்கல் செய்ய ஐகோர்ட் கிளை உத்தரவிட்டுள்ளது.

## உச்சநீதிமன்றத் தீர்ப்பை நான் மனமார வரவேற்கிறேன்: செல்வப்பெருந்தகை

சென்னை, நவ.21-

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் சார்பில், இந்த உச்சநீதிமன்றத் தீர்ப்பை நான் மனமார வரவேற்கிறேன் என செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்ததாவது; மாநில சட்டமன்றம் மக்கள் இறையாண்மையின் தூணாகவும், ஜனநாயகத்தின் உயிர்துடிப்பாகவும் விளங்குகிறது. அந்த உயரிய அமைப்பு நிறைவேற்றிய மசோதாக்களை, எந்தவொரு காரணமும் கூறாமல் ஆளுநர் நிறுத்தி வைக்க முடியாது என்று உச்சநீதிமன்றம் இன்று வழங்கிய தீர்ப்பு, இந்திய கூட்டாட்சித் தத்துவத்தையும் அரசியலமைப்புச் சட்டத்தின் ஆதாரக் கொள்கைகளையும் வலுவாக உறுதிப்படுத்துகிறது. மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு செயல்படுத்தும் சட்டங்களையும் கொள்கைகளையும் தடுக்கும் வகையில் ஆளுநர் பதவியைப் பயன்படுத்துவது என்பது அரசியலமைப்பின் ஆன்மாவின் நோக்கத்துக்கு முழுமையாக முரண்படுவதாகும் என்பதை இன்றைய தீர்ப்பு தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது.



சட்டமன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு முடிவும் மக்களின் விருப்பத்தின் வெளிப்பாடே என்பதை இந்த தீர்ப்பு மறுபடியும் அனைவருக்கும் உணர்த்துகிறது. இந்த தீர்ப்பு மாநிலங்களின் உரிமை, மக்கள் ஆட்சியின் கண்ணியம் ஆகியவற்றை பாதுகாக்கும் வரலாற்றுச் சிறப்பு மிக்க முன்னோட்டமாகும். மாநில அரசின் செயல்பாடுகளை தாமதப்படுத்தும் அல்லது தடைசெய்யும் நோக்கத்துடன் ஆளுநர் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தக் கூடாது என்பதை உச்சநீதிமன்றம் முற்றிலும் தெளிவுபடுத்தியுள்ளது. இது சட்டமன்றத்தின் மதிப்பையும், மக்களின் தீர்மானத்தின் மேன்மையையும் உயர்த்தும் நீதியின் முழக்கமாக திகழ்கிறது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் சார்பில், இந்த உச்சநீதிமன்றத் தீர்ப்பை நான் மனமார வரவேற்கிறேன்.

தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் செயல்பாடுகளில் எந்தவிதத் தடையும் இன்றி சட்டபூர்வமான முறையில் முன்னேற வேண்டும் என்ற நமது நிலைப்பாட்டுக்கு இன்று நீதிமன்றம் அளித்த உறுதிப்படுத்தல் மிகப் பெரும் பலமாகும். அரசியலமைப்பை மதிக்கும் பண்பும், கூட்டாட்சி மரபுகளைக் காக்கும் பொறுப்பும் அனைவராலும் கடைபிடிக்கப்பட வேண்டும் என்பதையும் இந்த தீர்ப்பு வலியுறுத்துகிறது. தமிழக மக்கள் தேர்ந்தெடுத்த அரசின் அதிகாரம் பாதிக்கப்படாமல், சட்டமன்றத்தின் கண்ணியம் குறையாமல், ஜனநாயகத்தின் மதிப்பு நிலைக்க தகுந்த பாதையை இந்த தீர்ப்பு உருவாக்கியுள்ளது. மக்கள் நலனே முதன்மையானது என்ற உண்மையான அரசியலமைப்பு வழங்கிய உறுதி மொழியில், நாங்கள் தொடர்ந்து நிலைத்திருக்கிறோம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திமுக அரசின் பொய் தொழில் முதலீடுகள்: ஆவண புத்தகத்தை வெளியிட்டார் அன்புமணி

சென்னை, நவ.21–

பாமக சார்பில், திமுக ஆட்சியின் தொழில் முதலீடுகள் குறித்த உண்மை நிலை என்ன என்பதை விளக்கும் வகையில் ஆவண புத்தகம் வெளியீட்டு நிகழ்ச்சி எழும்பூரில் நேற்று நடந்தது. இந்நிகழ்ச்சிக்கு பாமக தலைவர் அன்புமணி தலைமை தாங்கி, 'திமுக அரசின் பொய் தொழில் முதலீடுகள்' என்ற ஆவண புத்தகத்தை வெளியிட்டார்.



இந்நிகழ்ச்சியில் அன்புமணி பேசியதாவது: தமிழகத்தில் ரூ.11 லட்சத்து 32 ஆயிரம் கோடி தொழில் முதலீடுகள் நடந்திருக்கிறது என்றும், அதன்மூலம் 34 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறது என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின், தொழில் துறை அமைச்சர், நிதியமைச்சர் ஆகியோர் தொடர்ந்து ஒரு பொய்யைச் சொல்லி வருகிறார்கள். அது பொய் என்று இந்த ஆவணம் மூலம் நிரூபித்திருக்கிறோம். குறிப்பாக, 2025 செப்டம்பர் மாதம் வரை ரூ.11,32,575 கோடியில் 1,059 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டதாகவும், இதன்மூலம், 34,02,998 வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என அரசு தரப்பில் கூறப்படுள்ளது. அதாவது, 202122ம் ஆண்டில் ரூ.68,405 கோடி மதிப்பீட்டில் 130 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

அவற்றில் ரூ.10,000 கோடி மட்டுமே முதலீடுகள்வந்திருப்பதாக உத்தேசமாக கணக்கிடப்பட்டுள்ளது. அதேபோல், 2022 23ம் நிதியாண்டில் ரூ.1.67 லட்சம் கோடியில் 86 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தான நிலையில், ரூ.7 ஆயிரம் கோடிக்கும் குறைவாகவே முதலீடுகள் வந்துள்ளன.

2024 ஜனவரியில் சென்னையில் நடந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் ரூ.6,64,180 கோடி மதிப்பீட்டில் 631 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டன. ஆனால், இதில் 600க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் இதுவரை முதலீடு செய்யவில்லை.

மேலும், 202425ம் ஆண்டில் ரூ.39,549 கோடிக்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டு, இதுவரை ஒன்றுகூட செயல்பாட்டுக்கு வரவில்லை. 2025 ஏப்ரல் முதல் தற்போது வரை ரூ.1.18 லட்சம் கோடிக்கு 166 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெ முத்தாகி உள்ளன. இதில் ஒன்றுகூட செயல்வடிவம் பெறவில்லை.

முதல்வர் ஸ்டாலின் 7 நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு, ரூ.34,014 கோடிக்கு 66 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டார். ஆனால், இதுவரை ஒரு பைசா முதலீடு கூட வரவில்லை. தமிழகத்தில் கங்கைகொண்டானில் தொழில் தொடங்க கையெழுத்திட்ட நிறுவனம் ஒருசில நாட்களில் ஆந்திராவுக்குச் சென்றது ஏன்? அமெரிக்காவின் கூகுள் நிறுவன தலைமை செயல் அதிகாரி சுந்தர் பிச்சை தமிழகத்தைச் சேர்ந்தவர். அந்த நிறுவனம் தமிழகத்தில் முதலீடு செய்யாமல், ஆந்திராவுக்குச் சென்றது ஏன்? எல்லாவற்றுக்கும் ஊழல்தான் காரணம். இவ்வாறு அவர் கூறினார்.

## ஜெஃப்ரி எப்ஸ்டீன் கோப்புகளை வெளியிடும் மசோதாவில் டிரம்ப் கையெழுத்து: வெளியாகப்போகும் மர்மங்கள்

வாஷிங்டன், நவ.21-

பாலியல் குற்றச்சாட்டுகளில் பரபரப்பாக பேசப்பட்ட ஜெஃப்ரி எப்ஸ்டீன் தொடர்பான அனைத்து கோப்புகளையும் வெளியிட அனுமதிக்கும் மசோதாவில் அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் கையெழுத்திட்டார்.

அமெரிக்காவில் பல பாலியல் குற்றச்சாட்டுகளில் பரபரப்பாக அடிபட்ட நபர் ஜெஃப்ரி எப்ஸ்டீன். அவர் மீதான வழக்குகள் நிலுவையில் இருந்தபோது 2019 ஆம் ஆண்டு சிறையிலேயே தற்கொலை செய்து கொண்டார். அதன் பின்னர் அந்த வழக்குகள் கைவிடப்பட்டன. அவர் தொடர்பான விசாரணையில் நீதிமன்றம் அறிந்துகொண்ட தகவல்களும் சீலிடப்பட்டு வைக்கப்பட்டன. அந்த வழக்கில் பெரும் புள்ளிகளின் பெயர்கள் அடிப் பட்டது அதற்கு ஒரு காரணம்.

இந்த சூழலில், ஜெஃப்ரி எப்ஸ்டீன் தொடர்பான வழக்கின் அனைத்து கோப்பு களையும் வெளியிடக்கோரி ஜனநாயக கட்சியினர் கடுமையாக அழுத்தம் கொடுத்து வந்தனர். ஆரம்பத்தில் அந்த முயற்சிகளை எதிர்த்த ட்ரம்ப், பிறகு அவரது குடியரசு கட்சியினரும் கோரிக்கை வைத்ததால் கோப்புகளில் கையெழுத்திட ஒப்புக்கொண்டார்.

இதனை தொடர்ந்து 4271 வாக்குகளில் இது தொடர்பான மசோதாவை அமெரிக்க செனட் சபை நிறைவேற்றியது. கிளே ஹிக்கின்ஸ் மட்டும் மசோதாவை எதிர்த்தார். விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள அப்பாவி மக்கள் பற்றிய தகவல்களை வெளியிட இந்த மசோதா வழிவகுக்கும் என்று அவர் வாதிட்டார். பின்னர் செனட் சபை வாக்கெடுப்பு இல்லாமல் இம்மசோதாவை நிறைவேற்றியது.

இது தொடர்பாக ட்ரம்ப் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், 'ஜனநாயகக் கட்சியினர் எங்கள் அற்புதமான வெற்றிகளிலிருந்து திசை திருப்ப முயற்சிப்ப தற்காக, குடியரசுக் கட்சியை விட அவர்களை அதிகம் பாதிக்கும் எப்ஸ்டீனின் பிரச்சினையைப் பயன்படுத்தியுள்ளனர்' என்று மசோதாவில் கையெழுத்திட்டது குறித்து அறிவித்தார்.

இந்த மசோதாவின்படி, நீதித்துறை எப்ஸ்டீனுடன் தொடர்புடைய அனைத்து கோப்புகள் மற்றும் தகவல் தொடர்புகளையும், 2019 இல் சிறையில் அவர் இறந்தது தொடர்பான விசாரணை பற்றிய அனைத்து தகவல்களையும் 30 நாட்களுக்குள் வெளியிட வேண்டும்.

ஜெஃப்ரி எப்ஸ்டீனுடன் ட்ரம்ப் நண்பராக இருந்தார் என்று தொடர்ந்து குற்றம்சாட்டப்படுகிறது. ஆனால் எப்ஸ்டீனின் குற்றங்கள் பற்றி தனக்குத் தெரியாது என்றும், நீண்ட காலத்திற்கு முன்பே அவருடனான உறவுகளை துண்டித்துவிட்டதாகவும் ட்ரம்ப் கூறி வருகிறார்.

பிரச்சினையின் பின்னணி: கடந்த 2015 ஆம் ஆண்டு வர்ஜீனியா கிஃபர் என்ற அமெரிக்க பெண், பிரிட்டனைச் சேர்ந்த கிஷ்லெய்ன் மேக்ஸ்வெல் என்பவர் மீது ஒரு வழக்கு தொடர்ந்தார். அதில் ஜெஃப்ரி எப்ஸ்டீன் என்ற பாலியல் தொழில் இடைத்தரகருடன் சேர்ந்து கிஷ்லெய்ன் பாலியல் தொழிலுக்காக ஆள் கடத்தலில் ஈடுபட்டார் என்று கூறியிருந்தார். தானும் அவ்வாறாக



பாலியல் தொழிலுக்கு தள்ளப்பட்டதாகவும் அவர் கூறியிருந்தார். மேலும், 1999 முதல் 2022 வரை பாலுறவில் ஈடுபடும் வயதை எட்டாத தன்னை பலருடனும் கட்டாயப்படுத்தி உறவில் ஈடுபட வைத்ததாகவும் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டுகளை அடுத்து எப்ஸ்டீன் கைது செய்யப்பட்டார் அவர் மீதான வழக்கு விசாரணைகள் நடந்து கொண்டிருந்தபோது 2019 ஆகஸ்டில் அவர் நியூயார்க் சிறையில் தற்கொலை செய்து கொண்டார். அத்துடன் எல்லாம் முடிந்துவிட்டதாக கருதப்பட்ட நிலையில், தற்போது இந்நாள், முன்னாள் பிரபலங்களை கலக்கம் கொள்ளச் செய்யும் வகையில் நீதிபதி உத்தரவு லீக்காகும் தகவல்களும் அமைந்துள்ளன.

எப்ஸ்டீன் பில் கிளின்டன் தொடர்பு: நீதிமன்ற ஆவணங்களில் பில் கிளின்டன் "Doe 36" என்று ரகசிய குறியீட்டுடன் குறிப்பிடப்பட்டுள்ளார். அந்த ரகசியக் குறியீடு 50 முறை ஆவணத்தில் இடம்பெற்றுள்ளதாகத் தெரிகிறது. வழக்கு தொடர்ந்த வர்ஜினியா, தான் பில் கிளின்டனை ஒரு தீவில் இரண்டு முறை பார்த்திருப்பதாகவும் அப்போது அவருடன் இளம் பெண்கள் இருந்ததாகவும் கூறியுள்ளார். அந்தத் தீவு எப்ஸ்டீனுக்கு சொந்தமானது என்றும் அவர் கூறியுள்ளார். ஆனால், இந்த குற்றச்சாட்டை முன்னரே கிளின்டன் தரப்பு பலமுறை மறுத்துள்ளது. அது தொடர்பாக நடந்த விசாரணையில் பில் கிளின்டனின் விமானப் பயண ஆவணங்கள் சரி பார்க்கப்பட்டன. அப்போது, அவர் எப்ஸ்டீனின் விமானத்தைப் பயன்படுத்தி பாரிஸ், பாங்காக், ப்ரூனே ஆகிய இடங்களுக்குச் சென்றது உறுதிபடுத்தப்பட்டுள்ளது. இந்தப் பயணங்களை அதிபர் பதவிக்காலத்துக்குப் பின்னர் கிளின்டன் மேற்கொண்டுள்ளார்.

நீதிமன்ற ஆவணங்களின்படி ஜொஹான ஸ்ஜோ பெர்க் என்ற பாதிக்கப்பட்ட இன்னொரு பெண்ணும் கிளின்டன் சர்ச்சையை உறுதிப் படுத்தும் வகையில் சாட்சியம் கூறியுள்ளார். எப்ஸ்டீன் என்னிடம், "கிளின்டனுக்கு உங்களைப் போன்ற இளம் பெண்களையே பிடிக்கும் என்று கூறினார்" என சாட்சியம் கூறியிருக்கிறார். கிளின்டன் அதிபராக இருந்தபோது வெள்ளை மாளிகையைச் சேர்ந்த 22 வயது பணிப் பெண்ணுடன் பாலியல் தொடர்பு வைத்துக் கொண்டதாக சர்ச்சையில் சிக்கியது நினைவுகூரத்தக்கது.

ஸ்டீபன் ஹாக்கிங் ஜெஃப்ரி எப்ஸ்டீன் தொடர்பு: 2015ல் வர்ஜீனியா கிஃபரின் வழக்கையடுத்து எப்ஸ்டீன் அனுப்பிய மின்னஞ்சல் முக்கியத்துவம் பெற்றுள்ளது. கிஷ்லெயின் மேக்ஸ்வெல்லுக்கு எப்ஸ்டீன் அனுப்பிய அந்த மின்னஞ்சலில், "ஸ்டீபன் ஹாக்கிங் பாலுறவுக்கான வயதை எட்டாத பெண்களுடன் உறவு கொண்டார் என்று வெர்ஜினியா கூறுவது பொய் என்று சொல்ல முன்வரும் அவரது நண்பர்கள், குடும்பத்தினர், தெரிந்தவர்கள் என யாராக இருந்தாலும் அவர்களுக்கு பெரும் தொகையை சன்மானமாக வழங்கலாம்" என்று குறிப்பிட்டுள்ளதாகத் தெரிகிறது. இளவரசர் ஆண்ட்ரூவும்.. இந்த பாலியல் குற்றச்சாட்டு வரிசையில் இடம்பெற்றுள்ள இன்னொரு பெரும்புள்ளி இளவரசர் ஆண்ட்ரூ. ராணி எலிச்பெத்தின் மகன்களில் ஒருவரான இளவரசர் ஆண்ட்ரூ, சட்டரீதியான வயதுக்கு கீழே இருந்த அமெரிக்கப் பெண் வர்ஜீனியாவுடன் பலவந்தமாக பாலியல் உறவு வைத்துக்கொண்டார் என்று நீதிமன்ற ஆவணங்களில் உள்ளது.

இளவரசர் முறையற்ற வகையில் நடந்து கொண்டார் எனக் கூறும் வகையிலான இந்தக் கூற்றுகள் முற்றாக உண்மைக்கு புறம்பானவை என்று நீண்ட காலமாக பக்கிங்ஹாம் அரண்மனை மறுத்து வருகிறது. இருப்பினும், இளவரசர் ஆண்ட்ரூவின் முன்னாள் நண்பர் ஜெஃப்ரி எப்ஸ்டைன் என்பது கவனிக்கத்தக்கது. எப்ஸ்டைனால், அவருடன் இருந்த இளவரசர் ஆண்ட்ரூ உட்பட பலருடன் பாலியல் உறவு வைத்துக் கொள்ளுமாறு தான் நிர்பந்திக்கப்பட்டதாக வர்ஜீனியா கூறியிருக்கிறார்.

இவர்களைத் தவிர ஆல்ஃபபெட் இங்க் (Al-phabet Inc) என்ற கூகுள் நிறுவனத்தின் தாய்க்கழகத்தின் இணை நிறுவனரான லாரி பேஜ் மீதும் ஜெஃப்ரி எப்ஸ்டீன் தொடர்பு பற்றி நீதிமன்ற ஆவணங்களில் இருக்கிறது. நோபல் பரிசு புகழ் லாரன்ஸ் க்ராஸ், மறைந்த பாப் கிங் மைக்கேல் ஜாக்சன், மேஜிக் கலைஞர் டேவிட் காப்பர்ஃபீல்டு, காமெடி நடிகர் கிறிஸ் டக்கர், நடிகர் கெவின் ஸ்பேசி ஆகியோரும் ஜெஃப்ரியின் வர்ஜின் தீவுகளில் நடந்த பாலியல் கொண்டாட்ட நிகழ்வுகளில் கலந்து கொண்டதாகத் தெரிகிறது.

எப்ஸ்டீனின் வர்ஜின் தீவுகளில் நடந்த சிறுமிகள், இளம் பெண்களுடனான பார்ட்டி கொண்டாட்டங்களில் பில் கிளின்டன், ஸ்டீபன் ஹாக்கிங் உள்பட இத்தனை பெரும்புள்ளிகளும் ஈடுபட்டனரா என்ற வாத விவாதங்கள் இந்த 'ஜெஃப்ரி லீக்ஸ்' ஆவணங்களால் வலுத்துள்ளது.



# முன்மாதிரி அண்டை வீட்டார், முன்மாதிரி சமூகம் என்ற தலைப்பில் ஜமா அத்தே இஸ்லாமி ஹிந்த் அமைப்பு விழிப்புணர்வு

திருச்சி, நவ.21

இந்த பரப்புரை இன்று தொடங்கி 30ந் தேதி வரை நடக்கிறது. இது தொடர்பாக நேற்று நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் பரப்புரை ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் கமாலுதீன் கூறியதாவது :

ஜமா அத்தே இஸ்லாமி ஹிந்த் அமைப்பானது கடந்த 75 ஆண்டுகளுக்கு மேலாக தேசிய அளவில் பல்வேறு சமூக சேவைகள் சமய நல்லிணக்க பணிகளை முன்னெடுத்து வருகிறது ஒவ்வொரு கால சூழலுக்கு ஏற்ப பல்வேறு மையக் கருத்தில் பரப்புரை நடத்தி மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றோம். அந்த வகையில் நாளை முதல் முன்மாதிரி அண்டை வீட்டார் முன்மாதிரி சமூகம் என்ற மையக் கருத்தில் விழிப்புணர்வு பரப்புரை இயக்கத்தை நடத்த உள்ளோம். மனித மாண்புகளை மீட்டெடுக்கும் வகையில் அண்டை வீட்டாருடன் ஆன உறவையும், அன்பையும் மீட்டெடுக்கும் வகையில் இந்த பரப்புரை மேற்கொள்ளப்படுகிறது.

வெறுப்பை விதைத்து மதரீதியான பிளவுகளை வேறுபாடுகளை ஏற்படுத்தி வரும் இன்றைய கால சூழலில் அன்பால் நாம் இணைவதற்கும், வெறுப்பை வேரறுப்பதற்கும் இந்த பரப்புரை துணை நிற்கும்.

இது ஒரு முன்மாதிரி சமுதாயத்தை கட்டமைக்க உதவும் என உறுதியாக நம்புகிறோம். திருச்சியில் 40 இடங்களில் இந்த பரப்புரை மேற்கொள்ளப்பட உள்ளது. இவ்வாறு அவர் கூறினார். மக்கள் தொடர்பு செயலாளர் நவாஸ் கான், மூத்த உறுப்பினர் நாசர், மகளிர் அணி பொறுப்பாளர் மும்தாஜ் பேகம் மற்றும் நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# திருப்பத்தூர் மாவட்ட மருத்துவர் அணி துணைத்தலைவர் நியமனம்



■ அதிமுகவின் திருப்பத்தூர் மாவட்ட மருத்துவர் அணி துணைத் தலைவராக டாக்டர்.புவனேஸ்வரி MBBS அவர்களை, மாநில பொது செயலாளர் எடப்பாடி பழனிசாமி அவர்கள் நியமனம் செய்துள்ளார். பரிந்துரை செய்த மாவட்ட செயலர் கே.சி.வீரமணி, ஒன்றிய செயலாளர் ரமேஷ் மற்றும் அழகிரி ஆகியோருக்கு டாக்டர்.புவனேஸ்வரி நன்றியை தெரிவித்துள்ளார்



# ஒருவார காலமாக நிற்கும் டிப்பர் லாரி நடவடிக்கை எடுக்குமா காவல் துறை

இடுக்கி நவ.21

கேரள மாநிலம் இடுக்கி மாவட்டம் மூணார் உடுமலப்பேட்டை தேசிய நெடுஞ்சாலை பெரியவாரை ஸ்டான்ட் அருகே டிப்பர் லாரி நிறுத்தப்பட்டுள்ளதால், தற்போது உள்ளாட்சி தேர்தல் காரணமாக அரசியல் கட்சிகள் தீவிரமாக வாக்கு சேகரிப்பு செய்ய வாகனங்களில் பயணம் செய்வதும், அது மட்டுமல்லாமல் சுற்றுலா பயணிகளும் ஏராளமாக வருகை தந்த வண்ணம் உள்ளதால் போக்குவரத்து இடையூறு ஏற்பட்டு வருகிறது. தொடர்ந்து இதனால் விபத்து ஏற்படும் சூழலும் இருந்து வருகிறது, ஆகவே மூணார் போக்குவரத்து காவல் துறை சம்மந்தப்பட்ட டிப்பர் லாரியை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்று அப்பகுதி வாகன ஓட்டுநர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# அவிநாசி மேட்டுப்பாளையம் தார் சாலை அமைக்கும் பணி திருப்பூர் நெடுஞ்சாலைத்துறை கோட்ட பொறியாளர் ஈ.ரத்தினசாமி ஆய்வு

திருப்பூர், நவ.21-

திருப்பூர் நெடுஞ்சாலை துறை கோட்டம்,அவிநாசி நெடுஞ்சாலைத்துறை உட்கோட்டத்திற்குட்பட்ட, மாநில நெடுஞ் சாலையான அவிநாசி மேட்டுப்பாளையம் சாலையை நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி, விரிவாக்கம் செய்யும் பணியினை, நெடுஞ்சாலை துறை அமைச்சர் அவர்களின் உத்தரவின் படி, தமிழக முதலமைச்சரின் சாலை மேம்பாட்டு திட்டத்தில் ரூ 81.90 கோடி செலவில், அரசாணை பெற்று பணிகள் நடைபெற்று வருகிறது. தற்சமயம் கருவலூர் முதல் நரியம்பள்ளி வரை தார் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. அப்பணியினை திருப்பூர் நெடுஞ்சாலைத்துறை கோட்ட பொறியாளர் ஈ. ரத்தினசாமி அவர்கள் ஆய்வு செய்தார். ஆய்வின் போது பணியினை விரைந்து முடிக்க மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வர துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உதவிக்கோட்ட பொறியாளர், உதவி பொறியாளர் மற்றும் ஒப்பந்ததாரர் ஆகியோருக்கு அறிவுறுத்தினார்.



■ தேனி மாவட்டம், கம்பம் நகராட்சி அலுவலகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் (Special Intensive Revision) மேற்கொள்வது தொடர்பாக, வாக்காளர்களிடமிருந்து பூர்த்தி செய்து பெறப்பட்ட வாக்காளர் கணக்கிட்டு படிவங்கள் ஙிலிளி செயலியில் (App) பதிவேற்றம் செய்யும் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங்,நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# "எஸ்ஐஆர் பணியில் முறைகேடுகளுக்கு வாய்ப்பு" கிருஷ்ணசாமி கருத்து

சென்னை, நவ.21-

"அரசியல் கட்சிப் பிரதிநிதிகளை கொண்டு மேற்கொள்வதால் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை முறைகேடுகளுக்கு வாய்ப்புள்ளது" என்று புதிய தமிழகம் கட்சித் தலைவர் கிருஷ்ணசாமி கூறினார்.

இது குறித்து சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் அவர் கூறியது: "ராமேசுவரத்தில் கல்லூரி மாணவி படுகொலை செய்யப்பட்டது கண்டிக்கத்தக்கது. கவுரவ கொலையை தடுக்க சட்டம் கொண்டு வந்ததுபோல, கட்டாயக் காதல், கட்டாய திருமணத்தை தடுக்க சட்டமியற்ற வேணடும். தமிழகத்தில் தேவேந்திரகுல வேளாளர், ஆதிதிராவிடர், அருந்ததியின மக்கள் வாழும் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்காமல் புறக்கணித்துள்ளனர். வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை ஒரு மாதத்தில் செய்து முடிக்க முடியுமா என்று பலரும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அரசியல் கட்சிப் பிரதிநிதிகளை கொண்டு இந்தப் பணியை மேற்கொள்வதால் முறைகேடுகளுக்கு வாய்ப்புள்ளது. எனவே, வாக்குசாவடி நிலை அலுவலர்களைக் கொண்டு இப்பணிகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், கூடுதலாக அவகாசம் வழங்க வேண்டும். இப்பணியில் மாநில அரசு ஊழியர்கள் மட்டுமின்றி, மத்திய அரசு ஊழியர்களையும் ஈடுபடுத்த வேண்டும்.

2026 சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற நினைப்பவர்கள் கூட்டணி ஆட்சிக்கு ஒப்புக்கொள்ள வேண்டும். தமிழகத்தில் நிலவும் ஒரு கட்சி ஆட்சி முறையை முடிவுக்கு கொண்டுவர வேண்டும். அப்போதுதான் மக்களுக்கு விடிவுகாலம் வரும். கூட்டணி ஆட்சி, பூரண மதுவிலக்கு ஆகிய இரண்டு விஷயங்களே வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் ஆதிக்கம் செலுத்தும்" என்று அவர் கூறினார்.



■ தமிழ்நாடு முதலமைச்சர் மதுரை மாவட்டத்தில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கவும், முடிவுற்ற திட்ட பணிகளை துவக்கி வைக்கவும் மற்றும் புதிய திட்டப் பணிகளை அடிக்கல் நாட்டவும் வருகை தர உள்ளதால் மதுரை கிழக்கு வட்டம், உத்தங்குடியில் உள்ள கலைஞர் திடலில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பார்வையிட்டார். மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார், மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன் உடன் உள்ளார்.




# 2026 சட்டசபை தேர்தலில் 5 தொகுதிகள் வேண்டும்: இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சி

திருச்சி, நவ.21

இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் மாநில செயற்குழு கூட்டம் திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகிலுள்ள அரிஸ்டோ ஹோட்டலில் அக்கட்சியின் தேசிய தலைவர் காதர் மொய்தீன் தலைமையில நடந்த கூட்டத்தில் மாநில, மாவட்ட நிர்வாகிகள் செயற்குழு உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய காதர் மொய்தீன், இந்த கூட்டத்தில் 16 தீர்மானங்களை நிறைவேற்றி உள்ளோம். அது குறித்து முதல்வர் கவனத்திற்கு கொண்டு செல்வோம். கடந்த தேர்தலில் திமுக கூட்டணியில் எங்களுக்கு மூன்று தொகுதிகள் ஒதுக்கப்பட்டது. அதில் நாங்கள் தோல்வி அடைந்தோம். அதே நிலை வரும் தேர்தலில் நிச்சயம் ஏற்படாது. 2026 தேர்தலில் 5 தொகுதியிலாவது போட்டியிட வேண்டும் என்கிற விருப்பம் எங்களுக்கு உள்ளது. முஸ்லீம் சமூகத்தை சேர்ந்தவர்களுக்கு 16 தொகுதிகளில் போட்டியிட கலைஞர் ஆட்சி காலத்தில் வாய்ப்பு வழங்கப்பட்டது, வரும் தேர்தலிலும் அதை வலியுறுத்துவோம்.

இந்தக் கூட்டத்தில் மாநில முதன்மை துணைத்தலைவர் எம்.அப்துல் ரஹ்மான், இராமநாதபுரம் பாராளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ் கனி, மாநில செயலாளர்கள் ஆடுதுறை ஷாஜஹான், மில்லத் முஹம்மது இஸ்மாயில், காயல் மகபூப் மற்றும் திருச்சி எம்ஐஇடி பொறியியல் கல்லூரி நிறுவனங்கள் தலைவர் முஹம்மது யூனுஸ் மற்றும் அனைத்து மாநில மற்றும் அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர். இறுதியில் திருச்சி தெற்கு மாவட்ட தலைவர் கே. எம். கே.ஹபீபுர் ரஹ்மான் நன்றி கூறினார்.

# திண்டுக்கலில் தமிழ்நாடு தோட்டக்கலை அலுவலர்கள், உதவி தோட்டக்கலை அலுவலர்கள் சங்கம் இணைந்து நடத்தும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்




திண்டுக்கல், நவ.21-

தமிழ்நாடு தோட்டக்கலை அலுவலர்கள் நலச்சங்கம் மற்றும் தமிழ்நாடு உதவி தோட்டக்கலை அலுவலர்கள் சங்கம் இணைந்து நடத்தும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் திண்டுக்கலில் இன்று நடைபெற்றது இந்த ஆர்ப்பாட்டத்தில் தோட்டக்கலைத் துறையில் பணிபுரியும் அனைத்து நிலை அலுவலர்களும் கலந்து கொண்டனர் தற்போது தமிழக அரசின் மேலாண்மை உழவர் நலத்துறையால் கொண்டுவரப்பட்டுள்ள ஹிகிஜிஜி 2.0 இந்த அரசாணை ரத்து செய்யக்கோரி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இந்த புதிய அரசாணையில் தோட்டக்கலை தொழில்நுட்பம் மற்றும் பயின்று பணியாற்றி வரும் உதவி தோட்டக்கலை அலுவலர்களால் வேளாண் பயிர் சார்ந்த தொழில்நுட்பங்களை பற்றி படித்திடாத காரணத்தினால் விவசாயிகளுக்கு வேளாண் பயிர் உற்பத்தி மற்றும் பூச்சி நோய் பற்றிய தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு வழங்க முடியாது இதனால் விவசாயிகளின் வாழ்வாதாரம் பெரிய அளவில் பாதிக்கப்படும் 1979 ஆம் ஆண்டு முத்தமிழ் அறிஞர் அவர்களால் 50 ஆண்டுகளுக்கு முன்னர் தோட்டக்கலை பயிர்களின் முக்கியத்துவம் அறிந்து தனி துறையாக உருவாக்கினார். இதன் மூலம் இன்று வரை துறையால் சாகுபடி பரப்பு 21 லட்சம் ஆக உயர்ந்துள்ளது மேலும் வெளிநாடுகளுககு அன்னிய செலவாணி 35% இத்துறை மூலம் கிடைக்கின்றது. எனவே இத்துறையில் பணியாற்றும் அலுவலகங்களை பிற துறையுடன் இணைக்கும் போது நாட்டில் உள்ள விவசாயிகள் பாதிக்கப்படுவதோடு நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் பாதிக்கப்படும் காரணங்களை முன்னிட்டு UATT 2.0 என்ற களப்பணியாளர்களை இணைக்கும் அரசாணை ரத்து செய்ய வேண்டுகோள் விடுக்கப்படுகிறது



■ மதுரை மாவட்ட விளையாட்டு அரங்க வளாகத்தில் வரும் 28/11/2025 முதல் 10/12/2025 வரை 14வது ஹாக்கி ஆடவர் ஜூனியர் உலகப்கோப்பை நடைபெறுவதை முன்னிட்டு வீரர்கள் வருகை, வரவேற்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கை குறித்து தொடர்புடைய அலுவலர்களுடன் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000